Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
  Turnover Target : 100% ↑
- **Products for ...**
  Consumer Market : 3%
  Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  Up to Apr. 13 : 701 Nos.
  Up to Mar. 13 : 689 Nos.
- **Performance Apr. 13 ...**
  Turnover growth : 1.45%
  Employment growth : 3.67%
  100% Attendance : 16.23%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels &Tanks

Hydro Gen Go Green – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




## ஒற்றுமை!

ஒரு காட்டில் இரண்டு புள்ளி மான்கள் இருந்தன. பார்ப்பதற்கு இரண்டும் ஒரே மாதிரியாக இருக்கும். இணைபிரியாத நண்பர்களாக அவை இருந்தன. சேர்ந்தே சாப்பிடும். எங்கு சென்றாலும் சேர்ந்தேதான் செல்லும். ஒரு நாள் மழை பெய்தது. மான்களால் விளையாட முடியவில்லை. மழை நின்ற பிறகு தான் வெளியே செல்ல முடிந்தது. இன்னும் மழை பெய்யுமா என்று இரண்டு மான்களும் மேலே பார்த்தன. அப்போதுதான் மேகத்திற்குள்ளிருந்து வெளியே வந்தது சூரியன். அப்போது மான்கள் இரண்டும் சூரியனைப் பார்த்து, சூரியனே இன்னும் மழை வருமா? என்று கேட்டன. அதற்கு சூரியன், அதுதான் நானே வந்து விட்டேனே, இனி எப்படி மழை வரும்? என்றது.

பிறகு சூரியன் மான்களைப் பார்த்து சிரித்தது. ஒரு மான் கேட்டது. “எங்களைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய் சூரியனே? நீங்கள் இருவரும் ஒரே மாதிரியாக இருக்கிறீர்கள். அதுதான் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் யார்? என்று சூரியன் கேட்டது. நாங்கள்தான் அழகான இரண்டு புள்ளி மான்கள். நாங்கள் இருவரும் நண்பர்கள். நாங்கள் எப்போதும் ஒற்றுமையாகத்தான் இருப்போம் என்றன புள்ளிமான்கள்.

சூரியன் கேட்டது: மிகவும் நல்லது! உங்களில் யார் திறமை மிக்கவர்? நாங்கள் இருவருமே திறமையானவர்கள்தான்! புள்ளி மான்கள் சிரித்தப்படியே கூறின. சூரியன் சற்று யோசித்தது. பிறகு சொன்னது: சரி, அப்படியென்றால் நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதோ அங்கு ஒரு மரம் இருக்கிறது பாருங்கள். நீங்கள் இருவரும் ஓடிப்போய் அந்த மரத்தைத் தொடுங்கள். யார் முதலில் தொடுகிறார்களோ அவர்கள்தான் திறமையானவர்கள். இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு நான் ஒரு பரிசு தருவேன்.

சூரியன் பரிசு தருவதாகச் சொன்னதும் இரண்டு மான்களும் உடனடியாக ஓடத்தொடங்கின. மான்கள் மரத்தை நெருங்கின. ஆனால் மரத்தைத் தொடாமல் அப்படியே நின்று கொண்டிருந்தன. சூரியன் கேட்டது: “ஏன் மரத்தைத் தொடாமல் அப்படியே நின்று கொண்டிருக்கிறீர்கள்? நான் என் நண்பனுக்கு விட்டுக்கொடுத்து விட்டேன் என்றது ஒரு புள்ளிமான். இன்னொரு புள்ளிமானும், “நானும் என் நண்பனுக்கு விட்டுக் கொடுத்துவிட்டேன் என்று சொன்னது.

இதைக் கேட்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தது சூரியன். அது சொன்னது: அழகான இரண்டு புள்ளி மான்களே! உங்கள் ஒற்றுமையைப் பார்த்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் இருவரும் கடைசிவரை இப்படியே இருக்கவேண்டும். உங்களுக்கு நான் ஒரு வானவில்லை பரிசாகத் தருகிறேன். நீங்கள் அதைப் பார்த்து ரசிக்கலாம்.

இது ஒரு கதை என்றாலும் கூட, இந்த கதையின் பாத்திரங்களான புள்ளிமான்கள் உடன் பிறப்புகள் அல்ல, எனினும் இரண்டு மான்களுக்குள்ளும் எவ்வளவு ஒரு ஒற்றுமை. ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து வாழ்கிற சுபாவம். இது எத்தனை அருமையானது. இன்றைக்கும் ஒவ்வொரு குடும்பத்தோடும், எந்த ஒரு நிர்வாகமாக இருந்தாலும் சரி விட்டு கொடுக்கின்ற சுபாவம் நம்மில் இருந்தால் அன்பு வளரும். ஒற்றுமை ஓங்கும்!

Ms. P.E. Nancy
Director – Admin

## FUNCTIONAL WISHES



**Father's Day**
**16th June**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel:044 - 22294565<br>M/s. Jeya Clinic,<br>Tel: 098408 73107 |

## BIRTHDAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னைவளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. Saravanan. S.K -** Purchase | **1st Jun.** |
| **Mr. Samuvel. S -** Admin. | **3rd Jun.** |
| **Mr. Sivakumar. S**<br>AGM - Marketing | **4th Jun.** |
| **Mr. Kanthan. K -** Purchase | **5th Jun.** |
| **Mr. Satheesh. V -** Production | **5th Jun.** |
| **Mr. Parthasarathy. P -** Production | **5th Jun.** |
| **Mr. Suyambu. M –**<br>Manager – Finance / Fib Tec | **5th Jun.** |
| **Mr. Ranjith Kumar. S -** Purchase | **5th Jun.** |
| **Mr. Ravi. P -** Coating | **6th Jun.** |
| **Mr. Immanuel Thamburaj. A**<br>Production | **6th Jun.** |
| **Mr. Sri Ganesh. S -** Production | **6th Jun.** |
| **Mr. Rajakumari. V -** Coating | **7th Jun.** |
| **Mr. Vignesh. G -** Q.C | **8th Jun.** |
| **Mr. Sekar. A -** Production | **9th Jun.** |
| **Mr. Muthu. G -** Production | **10th Jun.** |
| **Mr. Babu. C**<br>Sr. Manager - Finance | **10th Jun.** |
| **Mr. Narayanan. R -** Production | **11th Jun.** |
| **Mr. Sreetharan. M -** Production | **12th Jun.** |
| **Mrs. Jayalatha. T -** Finance | **15th Jun.** |
| **Mr. Benjamin Michael. R**<br>Production | **19th jun.** |
| **Mr. Jeevanantham. G -** Coating | **20th Jun.** |
| **Mr. Manikantan. A-** Coating | **20th Jun.** |
| **Mr. Shankar Babu. B -** Purchase | **20th Jun.** |
| **Mr. Gnanasekar. G -** Production | **22nd Jun.** |
| **Mr. Rajakumaran. T -** Coating | **22nd Jun.** |
| **Mr. Gopalakrishnan. P –** Production | **26th Jun.** |

**Best Wishes from Tiaano Employees**

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

நமது நம்பிக்கை அலுவலகத்தில் நடந்த சம்பவம் இது. ஒரு காலைப்பொழுதில், பள்ளிச் சீருடையுடன், காலில் செருப்பின்றி எட்டு வயதுச் சிறுமி தயங்கித் தயங்கி வந்தாள். அப்பா இல்லை. அம்மா கூலித் தொழிலாளி, பள்ளிக்கூட புத்தகம் வாங்கப் பணமில்லை. "யாரிடமாவது கேட்டு வாங்கிக் கொள்" என்று அம்மா அனுப்பிவிட்டார். "என்னென்ன புத்தகம் வேண்டும்?" என்று கேட்டதும் பட்டியல் சொன்னாள். "ஒத்தைக் கோடு நோட்டு, ரெட்டைக் கோடு நோட்டு, கணக்கு நோட்டு," பட்டியல் முடிந்ததும் "பேனா வேண்டாமா?" என்று கேட்டோம். உடனே பதில் வந்தது "அது என்கிட்டேயே இருக்கு".

யாராவது உதவி செய்வார்கள் என்கிற நம்பிக்கை, தேவைக்கு மேல் கேட்கக் கூடாது என்கிற நேர்மை, இரண்டையும் நமக்குக் கற்றுக் கொடுக்க வந்த அந்தக் குழந்தைக்கு, வேண்டியவற்றை வாங்கித் தந்து நன்றியறிதலோடு வழியனுப்பினோம்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### சிரித்து மகிழ்வோம்

ஒருத்தர் சொன்னாரு, 'என் வேலைக்காரந்தான் உலகத்திலேயே படு முட்டாள்'னு மறுத்த அடுத்தவர், 'வாய்ப்பே இல்ல, என் வேலைக்காரனப்பத்தி தெரியாம சொல்றீங்க'ன்னாரு.

சரி சோதிச்சு பாத்துடுவோம்னு சொல்லி, மொத ஆளு தன்னோட வேலைக்காரனை கூப்பிட்டாரு. பத்து பைசாவை கொடுத்து 'கடைக்கு போய், நல்லா பாத்து இன்னோவா கார் ஒன்னு வாங்கிட்டு வா'ன்னாரு.

'சரிங்க அய்யா'ன்னு பவ்வியமா வாங்கிட்டு போயிட்டான். 'பாத்திங்களா, என் ஆளு எப்படி, என்ன வாங்க சொன்னேன்னும் தெரியாது, பத்து பைசா செல்லுமான்னும் தெரியாது, ஆனா சொன்ன உடனே வாங்க கிளம்பிட்டான் பாருங்க'ன்னாரு. 'கொஞ்சம் பொறுங்க'ன்னு சொல்லி அடுத்தவர் அவரோட வேலைக்காரனை கூப்பிட்டாரு.

அவன் இன்னும் மொத ஆளவிட அதிகமா பவ்யமா வந்தான். 'சொல்லுங்கைய்யா என்ன செய்யனும்'னான். 'அவசரமான விஷயம், வீட்டுல போய் நான் இருக்கிறேனான்னு பாத்துட்டு வா'ன்னாரு. 'உடனே பாத்துட்டு வர்றேன்'னு அவனும் கிளம்பிட, 'பாத்திங்களா, என் ஆள்'ன்னாரு. மொத ஆளு 'எப்பா உன் ஆளுதான் அருமை'னு தோல்விய ஒத்துகிட்டாரு.

அதே நேரம், வேலைக்காரங்க ரெண்டு பேரும் வழியில் சந்திச்சிட்டாங்க. ஏற்கனவே பாத்துகிட்டதனால, ஒருத்தன் சிரிச்சுகிட்டே இன்னொருத்தன் கிட்ட, 'என் மொதலாளிய மாதிரி முட்டாள் இந்த உலகத்திலேயே இல்ல'ன்னான். 'எப்படி சொல்றே'ன்னான் அடுத்தவன்.

'பத்து பைசாவ கொடுத்து என்னமோ வாங்கிட்டு வர்ற சொல்றானே?, இன்னிக்கு ஞாயித்து கிழமை, கடை இருக்குமா'ன்னான். 'அட அதாவது பரவால்ல, மறந்து போயி சொல்லியிருக்கலாம், ஆனா எங்க ஆளு போயி அவரு இருக்காரான்னு வீட்டுல போயி பாத்துட்டு வரனுமாம். அவருகிட்டதான் செல் போன் இருக்குல்ல, போன் பண்ணி தெரிஞ்சுக்கலாம்ல'ன்னான்.

எவ்வளவு தான் துன்பங்கள் இருந்தாலும் நகைச்சுவை நம் கவலைகளைப் போக்கி நம்மை உற்சாகப்படுத்துகின்றது. சிரிக்க வைக்க முயற்சி செய்யாவிடினும், நகைச்சுவைகளை படித்து, பார்த்து சிரித்து மகிழ்வோம்.

Compiled by : Mr. Shahul Hameed Bava
Service Provider

## தெரிந்து கொள்வோம்

### Facts about technology

1. The average computer user blinks 7 times a minute less than half the normal rate of 20.
2. E-mail has been around longer than the world wide web.
3. The first computer mouse was invented by Doug Engelbart in around 1964 and was made of wood.
4. On an average work day, a typist's fingers travel 12.6 miles.
5. On ebay, there are an average of $680 worth of transactions each second.
6. Domain names are being registered at a rate of more than one million names every month.
7. Computer programming is currently one of the fastest growing co occupations.
8. By the year 2012 there will be approximately 17 billion devices connected to the internet.
9. There are approximately 1.06 billion instant messaging accounts world wide.
10. Bill clinton's inauguration in January 1997 was the first to be webcast.

Collected from internet

### புற்று நோய்க்கு புதிய சிகிச்சை (இந்திய சிறுவன் சாதனை!)

கனடாவில் உள்ள பள்ளியில் படித்துவரும் அர்ஜுன் நாயர் (16) என்ற மாணவன் 'நானோ புல்லெட்ஸ்' உதவியுடன் புற்று நோய்க்கு சிகிச்சை அளிக்கும் புதிய முறையை கண்டுப்பிடித்துள்ளார். இதை மூத்த விஞ்ஞானிகள் குழுவும் வரவேற்றுள்ளனர்.

கேன்சர் போட்டோதெர்மல் சிகிச்சை என்ற இந்த புதிய முறையின் மூலம் நோயாளியின் உடம்பில் தங்கத்துகல்கள் செலுத்தப்படுகிறது. பின்னர் அது கேன்சர் செல்கள் மீது ஒரு கட்டியைபோன்று ஒன்றுதிரள்கிறது. அப்போது ஒளியைப் பாய்ச்சி கேன்சர் செல்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. இந்த முறையை கடைபிடிக்கும் போது, கேன்சர் செல்கள் அதிகரிப்பதை தடுக்க முடியும் என்பதால் இந்த முறை மிகவும் பயனுள்ள ஒரு முறையாக உருவாகும் என்று கருதப்படுகிறது.

இந்த ஆராய்ச்சியில் இரண்டு வருடங்களாக தீவிரமாக ஈடுபட்டுள்ள மாணவன் அர்ஜுன் நாயருக்கு ஸ்ஃபோனி பையோஜீனியஸ் போட்டியில் முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

### சத்தம் போடவே கூடாது

கண்ணுசாமி, பில்லாகுடி என்ற குக்கிராமத்தில் வசித்து வந்தான். மகா கஞ்சன். ஒரு நாள், விமான நிலையத்தைப் பார்ப்பதற்காக தன் மனைவியோடு வந்திருந்தான். விமானம் மேலே கிளம்புவதையும், வானில் வட்டமிடுவதையும், கீழே இறங்குவதையும், இருவரும் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் ஆர்வத்தைப் பார்த்த அங்கிருந்த விமானி ஒருவர், "நீங்கள் இருவரும் வாருங்கள்... இந்த விமானத்தில் ஏறி, வானத்தில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வரலாம். ஆளுக்கு நூறு ரூபாய் தான்!" என்றார்.

கஞ்சனுக்கு ஆர்வம் தான். இதற்காகவா இருநூறு ரூபாய் வீண் செலவு செய்வது என்று நினைத்து, "நாங்கள் வரவில்லை," என்றான்.

எப்படியும் அவர்களிடம் பணம் பெற நினைத்த விமானி, "நீங்கள் பணம் தர வேண்டாம். எந்தக் கட்டணமும் இல்லாமல், உங்களை இனாமாகவே விமானத்தில் ஏற்றிச் செல்கிறேன். வானத்தில் விமானம் பறக்கும்போது, என்ன நடந்தாலும். நீங்கள் சிறு சத்தம் கூடப் போடக்கூடாது. அப்படி சத்தம் போட்டுவிட்டால், கட்டணமாகிய இருநூறு ரூபாயை நீங்கள் கொடுத்துவிட வேண்டும் சம்மதம் தானே?" என்றார்.

"சம்மதம்!" என்றான் கஞ்சன். தன் மனைவியுடன் விமானத்தில் ஏறி அமர்ந்தான். விமானம் பறக்கத் தொடங்கியது. வானத்தில் விமானம் குட்டிக்கரணம் போட்டது. தலை கீழாகப் பறந்தது. சீறிப் பாய்ந்தது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்த கஞ்சன், சிறு ஓசை கூட எழுப்பவில்லை. வேறு வழியின்றி விமானத்தைத் தரை இறக்கினார் விமானி.

கஞ்சனின் கையைக் குலுக்கி, "ஆமாம், பயமுறுத்தும் விமான விளையாட்டுகளை நான் வானத்தில் செய்யும்போது, இதுவரை எனக்குத் தெரிந்து சிறு ஓசை கூட எழுப்பாது இருந்தீர்கள்! என் பாராட்டுக்கள். எப்படி இது உங்களால் முடிந்தது?" என்று கேட்டார் விமானி.

"நான் கூட, ஒரே ஒரு சமயம், என்னை அறியாமல் கத்த இருந்தேன். எப்படியோ முயன்று அடக்கிக் கொண்டேன்!" என்றான் கஞ்சன். "எப்போது?" என்று கேட்டார் விமானி. "என் மனைவி, விமானத்தில் இருந்து தவறிக் கீழே விழுந்தபோது!" என்றான் கஞ்சன். மயங்கி விழுந்தார் விமானி.

Collected from internet

### நம்பித்தான் ஆக வேண்டும்
### 5S (தொடர்ச்சி XXII)

**சிவப்பு, பச்சை, மஞ்சள்**

இந்தச் 'சிவப்பு ரிப்பன்' உத்தி, நாம் நினைப்பதைக் காட்டிலும் பல மடங்கு அதிகப் பலனளிக்கும், 'செய்ரி' முறை செயல்படுத்தப்படும்போது, பெரும்பாலான தொழிற்சாலைகளில் சுமார் எழுபது சதவிகிதப் பொருட்கள் 'சிவப்பு ரிப்பன்' மாட்டப்பட்டு வெளியேற்றப்படுகின்றன.

அடுத்து, பச்சை ரிப்பன் பொருட்களைப்பற்றி நாம் இப்போது கவலைப்பட வேண்டியதில்லை. அவற்றைச் சில நாள்கள் கழித்து மீண்டும் கவனிக்கலாம். இப்போதைக்கு அவை ஒழுங்காகப் பயன்பட்டுக் கொண்டிருக்கட்டும்.

கடைசியாக, மிச்சமிருக்கிற 'மஞ்சள் ரிப்பன்' தான் மிகச் சுவாரசியமானது. பயன்படுமா, பயன்படாதா என்று உறுதியாக தெரியாமல், நமக்கே குழப்பம் உண்டாக்கிவிட்ட இந்தப் பொருட்களை என்ன செய்யலாம்?

## கவிதைகள்

### Peace

"Where there is righteousness in the heart
There is beauty in the character.
When there is beauty in the character,
There is harmony in the home.
When there is harmony in the home.
There is order in the nation.
When there is order in the nation,
There is peace in the world."

Dr. APJ. Abdulkalam

### எதிர்கொள்வோம்

வாடிப்போகும் மலர்களின் இதழ்கள் கூட
சிரிக்கின்றன..!
வாழப்பிறந்த நாம் ஏன் அழ வேண்டும்.
மாலையில் மரணம் என்று தெரிந்தும் கூட,
காலையில் கண்ணீர் வடிப்பதில்லை பூக்கள்.!
இன்று வரும் துன்பங்களைக் கண்டு ஓடி
ஒழிந்தால்,
நாளை வரும் இன்பங்களை யார் வரவேற்பது...!

Compiled by : Mrs. T. Gowsala
Facilitation

### கற்றுக்கொள்...!

அனைவரையும் விரும்பு...
சிலரை நம்பு...
ஒருவரை பின்பற்று...
ஆனால்
ஒவ்வொருவரிடம் இருந்தும் கற்றுக்கொள்...

Compiled by : Mr. M. Kumar
Design

## சிந்தனைக்கு

- "பழங்கள் மரத்தின் அடிப்புற பகுதியில் வளர்வதில்லை, கிளைகளில் தான் காணப்படுகின்றன. அதுபோல திறமைகளை வளர்த்து தகுதியுள்ளவராக மாறும்போதே பலன்கள் கிடைக்கும்."
- **உத்வேகமளிக்கும் மந்திரம் :** மகிழ்ச்சியும், வெற்றியும் நமக்காக காத்திருக்கும் வாய்ப்புகள் அதை தேர்ந்தெடுப்பது உங்களைப்பொறுத்தது.

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

### 7. விமரிசனப் பார்வை

பெயர் தெரியாத யாரோ ஒரு புண்ணியவான், இணையத்தில் எழுதிவைத்த ஆங்கிலக் கவிதை ஒன்று நண்பர்கள், காதலர்களிடையே மிகப் பிரபலமாகிவிட்டது. உணர்ச்சிமயமான அந்தக் கவிதையின் சாரம் இதுதான் :

நீங்கள் ஒருவரை மிகவும் நேசித்தால், அவரைப் பிடிவாதமாக உங்களிடமே பிடித்து வைத்துக் கொள்ளாதீர்கள். மாறாக, அவர்களை வெளியே செல்ல அனுமதியுங்கள். அவர்கள் நிஜமாகவே உங்களை நேசித்தால், உங்களுடையவர்களாக இருந்தால், நிச்சயம் உங்களிடமே திரும்பி வருவார்கள்.

அப்படித் திரும்பி வராவிட்டால், வருத்தப் படாதீர்கள். ஏனெனில், அவர்கள் எப்போதும் உங்களை நேசிக்கவே இல்லை. 'ஹைக்கூ' க்களில் தொடங்கி, 'சென்ரியூ'க் கள்வரை பலவிதமான கவிதை வடிவங்களை நமக்குக் கொடுத்திருக்கும் ஜப்பானியர்களின் கவிதைகளில் அழகியல் கொஞ்சம். ஆனால் '5S' போன்ற அவர்களுடைய மேலாண்மை உத்திகளிலும், இதுபோன்ற கவிதைகளின் சாயல் தென்படுவது ஆச்சரியம்தான்.

ஏனெனில், 'செய்ரி' முறையில் மஞ்சள் ரிப்பன் கட்டப்பட்ட பொருட்களை எப்படிக் கையாள்வது என்று விசாரித்தால் கிட்டத்தட்ட இந்தக் கவிதையைப் போன்ற ஓர் உத்தியைத்தான் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஒரு பொருள் நிஜமாகவே நமக்குப் பயன்படுகிறதா இல்லையா என்று நிச்சயமாகத் தெரியாதபோது, அதன்மீது மஞ்சள் ரிப்பன் கட்டி அந்தத் தேதியைக் குறித்து வைத்தோம். இல்லையா?

இப்படி மஞ்சள் ரிப்பன் கட்டப்பட்ட பொருட்களையெல்லாம் சிவப்பு, பச்சை ரிப்பன்களோடு கலக்காமல், வேறோர் இடத்தில் பிரித்துவைக்க வேண்டும். இந்த இடத்துக்கு, 'குவாரன்டைன்' (Quarantaine) என்று பெயர்.

தொடரும்...

### HYDRO-GEN

